# மார்ச் – 08 – வெள்ளி

## சீயோனுக்கு இன்முகம் காட்டி நன்மை செய்யும்: திபா. 51:18

## முதல் வாசகம் : ஏசாயா 58 : 1 – 9

இறைவனாகிய ஆண்டவர் கூறுகிறார்: பேரொலி எழுப்பிக்கூப்பிடு, நிறுத்திவிடாதே. எக்காளம் முழங்குவது போல் உன் குரலை உயர்த்து என் மக்களுக்கு அவர்களின் வன்செயல்களையும், யாக்கோபின் குடும்பத்தாருக்கு அவர்களின் பாவத்தையும் எடுத்துக்கூறு.அவர்கள், நேர்மையானவற்றைச் செய்யும் மக்களினம்போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள் என் நெறிமுறைகள் பற்றிய அறிவை நாடுகின்றார்கள் நேர்மையான நீதித்தீர்ப்புகளை என்னிடம் வேண்டுகின்றார்கள் கடவுளை அணுகிவர விழைகின்றார்கள்."நாங்கள் உண்ணா நோன்பிருந்த பொழுது, நீர் எங்களை நோக்காதது ஏன்? நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்? என்கிறார்கள். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள் உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள்.இதோ, வழக்காடவும், வீண்சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்! இன்றுபோல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணாநோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நாணலைப் போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்?கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு!பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு!அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும் விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் உன் நேர்மை உனக்கு முன் செல்லும் ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின்சென்று காக்கும்.அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் "இதோ! நான்" என மறுமொழி தருவார்.

**பதில்பாடல் :** நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பில்லை.

## நற்செய்தி : மத்தேயு 9 : 14 - 15

அக்காலத்தில், யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்" என்றார்.

**தியானம்:** மனித வாழ்க்கை என்பது கால இட சூழ்நிலைகளுக்கு உட்பட்டது. கடவுள் மட்டுமே காலம் கடந்தவர் எங்கும் நிறைந்திருப்பவர். மனித வாழ்க்கை காலம் என்னும் நீரோட்டத்தில் மிதந்துசெல்கின்ற படகு போன்றது. சில வேளைகளில் அது பாய்கின்ற தண்ணீரோடு கூடவே செல்லும் வேறு நேரங்களில் நீரோட்டத்தை எதிர்த்துச் செல்லும். இயேசுவும் திருமுழுக்கு யோவானும் இந்த இரு போக்குகளுக்கும் எடுத்துக்காட்டாக அமைகிறார்கள். யோவான் நோன்பிருந்தார் அவருடைய சீடர்களும் நோன்பிருந்தார்கள். இயேசுவோ யூத சமய நோன்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்களோடு கூட அமர்ந்து பல தருணங்களில் உணவருந்தியதை நற்செய்தி நூல்கள் எடுத்துரைக்கின்றன. இங்கே இயேசுவுக்கும் திருமுழுக்கு யோவானுக்கும் இடையே நிலவிய ஒரு வேற்றுமையை நாம் காண்கின்றோம். இயேசு தம்மை மணமகனுக்கு ஒப்பிடுகிறார். திருமண விருந்து என்பது மகிழ்ச்சியான ஒரு தருணம். அப்போது கூடி வருகின்ற விருந்தினர்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடி, கூடியிருந்து விருந்துண்டு மகிழ்வார்கள். மணமக்களின் மகிழ்ச்சியில் கலந்துகொள்வார்கள். அந்த நேரத்தில் நோன்புக்கு இடமில்லை. இயேசு நமக்கு மகிழ்ச்சிதரும் நல்ல செய்தியை, அதாவது கடவுளின் ஆட்சி பற்றிய செய்தியை அறிவித்தார். அவர் மக்களோடு இருந்த நேரம் மகிழ்ச்சியின் நேரம். ஆனால் ஒருநாள் அவர் மண்ணக வாழ்வை நிறைவுக்குக் கொணர்ந்து, தம் சீடரைவிட்டுப் பிரிவார். அந்த நேரம் சீடர்களுக்கு இக்கட்டானதும் இடர்நிறைந்ததுமாக இருக்கும். சீடர்களைத் துன்பங்கள் தேடிவரும். ஏன், அவர்கள் உயிருக்கே ஆபத்து வரும். அதையும் சீடர்கள் உறுதியான உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இப்போது, இயேசுவின் உடனிருப்பு நமக்கு இருப்பதால் நம் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து இறைபுகழ் பாட வேண்டும்.